
# பெரியார் மாவட்டக் கோயில்கள் ஆய்வரங்கம்

அக்டோபர் 8, 1988.



ஈரோடு தாளவாடி ஈரோடு விசயமங்கலம்

## ஓராண்டு நிறைவு விழா

**(7-10-1987 — 6-10-1988)**

அரசு அருங்காட்சியகம்,

**ஈரோடு-638001.**

Wendhelayam
17/10/88.

# பெரியார் மாவட்டக் கோயில்கள்

(ஆய்வரங்கம்)
8.10.1988.


தொகுப்பாளர்

வே.ஜெயராஜ்,
காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு.



அரசு அருங்காட்சியகம்,
நகராட்சி அலுவலக வளாகம், ஈரோடு-1.
1988.

# பொருளடக்கம்

முன்னுரை:

ஆர்த்தர கபாலீசுவரர் திருக்கோயில் என்ற திருத்தொண்டீச்சுரம் - ம. காந்தி.

ஈரோட்டில் புகழ் பெற்ற கோயில்கள் - சி. டிக்கரெட்டி

காளமங்கலம் குலவிளக்கம்மன் - ப. செல்வமணி

குன்னத்தூர் கோயில்களின் கல்வெட்டுக்கள் - ஆர். ரங்கராஜ்

கூவலூர்த் திருக்கோயில் - பொன்முகிலன்

கோட்டமாளம் கோயில் - சோ. ரெங்கராஜுலு

கோயிலும் ஒரு மருத்துவமனையே - பி. லலிதாபாய்

சித்திரமேழிக் கோயில்கள் - அ. புவனேஸ்வரி

சிலுவங்கொம்பு முனியப்பன் கோயில் - சோ. ம. ஈஸ்வரன்

தலையநல்லூர் பொன்காளியம்மன் கோயில் - பெ. கு. சாந்தகுமார்

திங்களூர் கோயில்கள் - பெ. சண்முகம்

திருப்பாண்டிக் கொடுமுடி - க. ஆ. திருஞானசம்பந்தம்

பண்டைய கொங்குநாட்டு மக்கள் இசை - என். எம். சுப்பாராமன்

பவானி சங்கமேஸ்வரர் கோயில் - கி. ஸ்ரீதரன்

பாரியூர்த் திருக்கோயில் - கூ. ச. சென்னியப்பன்

பூந்துறை கோயில்கள் - கா. அரங்கசாமி

பெரிய சேமூர்க் கோயில்கள் - அ. பொன்னுசாமி

பெரியார் மாவட்டக் கிறுத்தவ கோயில்கள் - வே. ஜெயராஜ்

பெரியார் மாவட்டத்தில் கிராம தேவதைகள் - எஸ். தேவகி

பெரியார் மாவட்டத்தில் சமண சமய கோயில்கள் - செ. இராசு

பெரியார் மாவட்டத்தில் சித்தர் கோயில்கள் - சா. பழனிசாமி

விஜயமங்கலம் திருக்கோயில்கள் - க. இலக்குமிநாராயணன்.

# முன்னுரை

பெரியார் மாவட்டத்தின் தலைநகரான ஈரோடு நகரில் அரசு அருங்காட்சியகம் 1987-ம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் ஏழாம் நாள் தொடங்கப்பட்டது. பல்வேறு பணிகளுக்கிடையே பெரியார் மாவட்டத்திலுள்ள பல்வேறு கோயில்களைப் பற்றி ஒரு ஆய்வரங்கம் நடத்தினால் ஆய்வாளர்கள் மறைந்து கிடக்கும், கோயில்களைப் பற்றிய, வரலாறுகளைத் தொகுத்துக் கொடுக்க முடியும் என்ற அவாவினால் இவ்வருங்காட்சியகத்தின் ஓராண்டு நிறைவினையொட்டி "பெரியார் மாவட்டக் கோயில்கள்" என்ற கருத்தரங்கம் 7.10.88-ல் நடத்தப்பெறுகிறது.

மாவட்டத் தலைநகரிலெல்லாம் அருங்காட்சியகங்கள் அமைக்க அரும்பாடுபட்டுவரும் தமிழ்நாடு அரசு அருங்காட்சியகங்களின் இயக்குநர் திரு என்.ஹரிநாராயணா அவர்கள் அருங்காட்சியகங்களுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பை வலுப்படுத்த ஆய்வரங்கம் நடத்த பேராதரவு கொடுத்து இத்துறையை முன்னணியில் நடத்திச் செல்கிறார்கள். அவர்களுக்கு நன்றி! ஆய்வாளர்களுக்கும், சிறப்பு விருந்தினர்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி உரித்தாகட்டும்.

அன்புடன்,

வே.ஜெயராஜ்,
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
ஈரோடு 638 001.

* * *

# ஆர்த்தர கபாலீசுவரர் திருக்கோயில்

## என்ற

## திருத்தொண்டீச்சுரம்

ம. காந்தி, காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம், வேலூர்.

ஈரோடு நகர் பிச்சைக்காரன் ஓடைக்கும் பெரும்பள்ள ஓடைக்கும் இடையில் அமைந்துள்ளதால் ஈரோடு என வழங்கப்படுகின்றது. இந்த ஈரோடு நகரில் உள்ள பழைய சிவன் கோயில் அருள்மிகு திருத்தொண்டீச்சுரம் ஆகும். இக்கோயிலில் இருந்து அருளும் இறைவனை ஆர்த்தரகபாலீசுவரர் ஈரோடையப்பா ஈர ஓடையப்பர் என்று அழைப்பர். இறைவியின் பெயர் வாரணியம்மை.

இக் கோயில் கி.பி. 12ம் நூற்றாண்டில் கொங்குசோழன் கரிகாலன் என்பவனால் கட்டப்பட்டதாகும். இக் கோயிலில் 18 கல்வெட்டுக்கள் உள்ளன. அவை பாண்டிய மன்னர், ஹொய்சால மன்னர், விஜயநகர மன்னர், மைசூர் உடையார் கல்வெட்டுகள் ஆகும்.

இச் சிவன் கோயில் கீழ்த்திசையை பார்த்த வண்ணம் உள்ளது. மூலவர் கொங்கு சோழர் காலத்தில் கட்டப்பட்டு மகா மண்டபம் விஜயநகர ஆட்சியில் கட்டப்பட்டுள்ளது. தேவியின் சன்னதி மூலவருக்கு வலது பக்கத்தில் அமைந்துள்ளது. மூலவரின் கருவறையை சுற்றியுள்ள மாடங்களில் நடன கணபதி லிங்கோத்பவர், , பிரம்மா, துர்க்கை ஆகிய தெய்வ உருவங்கள் உள்ளன. சுற்று மண்டபத்தில் அதாவது கருவறையின் பின்புறம் அருள்மிகு கணபதியின் சந்நதியும் அருள்மிகு சுப்பிரமண்யர் சந்நதியும் இருக்கின்றன. சுப்பிரமணியர் சந்நதிக்கு எதிரில் ஒரு கிணறு உள்ளது. அதன் தண்ணீர் சுவாமியின் அபிஷேகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

மகா மண்டபம் 42 பெரிய உயரமான கல்தூண்களால் நிறுவப்பட்டுள்ளது. அவற்றில் முதல் இரண்டு வரிசைகளும் உருளையான கற்றூண்களால் ஆனவை. இம் மண்டபத்தின் வடக்குப் பகுதியின் நடுவில் காளியின் உருவமும், ஊர்த்தவ தாண்டவ சிலையும் தனித் தனித் தூண்களில் செதுக்கப்பட்டுள்ளன.

இராஜகோபுரம் 1961ல் மூன்று நிலைகளுடன் திகழ்ந்தது. ஐந்து நிலையாக கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது.

இக் கோயிலின் தல விருக்ஷம் வன்னிமரம். வன்னி மர மேடையில் சுமார் கி.பி. 9 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சுப்ரமணியர் சிலை காணப்படுகின்றது. வலம்புரி விநாயகர் சிலையும் ஒரு துர்கை சிலையும் அங்கு உள்ளன.

---

## ஈரோட்டுப்புகழ் பெற்ற கோயில்கள்.

முனைவர் சி. முத்துரெட்டி,

ஸ்ரீ வாசவி கல்லூரி, ஈரோடு.

ஈரோட்டில் புகழ் பெற்ற கோயில்கள் மூன்றாகும். அவை 1) மகிமாலீசுவரர் கோயில் (2) தொண்டீசுவரர் கோயில் (3) கஸ்தூரி அரங்கநாதர் கோயில் என்பவை.

(1) மகிமாலீசுவரர் கோயில்:- சிவன் கோயில் - இக்கோயில் மாலி, சுமாலி, மகிமாலி என்னும் அசுரர்கள் அமைத்தனர் என தரபுராணம் கூறுகிறது. இக்கோயில் எழுந்தருளியுள்ள இறைவனன் திருப்பெயர் மகிமாலீசுவரர். துவார பாலகர்கள் பல்லவர் காலத்துக்குச் சமகால அரசர்களான கங்கமன்னர்களின் காலத்தவை. சிலர் பல்லவர் காலத்தவை என்கின்றனர். சிலர் கொடும்பாளூர் மகிமாலி என்பவர் கட்டினார் என்று கூறுகின்றனர். சுந்தரர் பரவை, சங்கிலியாருடன் சேரமான் கவரி வீசும் காட்சி கண்டுகளிக்கத்தக்கது.

(2) தொண்டீசுவரர் கோயில்:-

ஈரோட்டுத் தொண்ட நாயனார் கோயிலுக்குத் தொண்டீச்சுவரம் என்னும் பெயரை நம் முன்னோர்கள் வழங்கி வந்துள்ளனர். இத்திருக்கோயில் 12ம் நூற்றாண்டில் (கி.பி. 1146ல்) கரிகாலச் சோழனால் கட்டப்பட்டது. இறைவனின் பலபெயர்கள், ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன.

(3) கஸ்தூரி அரங்கப்பெருமாள் கோயில்:-

இக்கோயிலின் நுழைவாயிலில் இராஜகோபுரம் இல்லை. திருப்பணிகள் பற்றிய பிற்காலக் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் இருபுற நிலைக்கல்லில் உள்ள கல்வெட்டு, தஞ்சைப் பேரரசரான மதுரை கொண்ட கோப்பரகேசரி வர்மரான முதலாம் பராந்தக சோழனுடைய பதினைந்தாவது ஆண்டில் வெட்டப்பெற்றதாகும். இக்கோயில் கருவறையின் மேற்குப் பட்டியில் உள்ள கல்வெட்டானது கொங்குமன்னரான இராச கேசரி திரிபுவன சக்கரவர்த்தி வீர பாண்டிய தேவர் ஆட்சியின் 20ம் ஆண்டில் வெட்டப்பட்டதாகும்.

மேற்கூறிய ஈரோட்டில் புகழ் பெற்ற கோயில்கள் வரலாற்றுப் பெட்டகங்கள், காலக்கணக்கை மௌனமாகச் சொல்லிவரும் அருங்காட்சியகங்கள்.

# காளமங்கலம் குலவிளக்கம்மன்.

செல்வி. ப. செல்வமணி,
9 புத்தர் வீதி,
ஆசிரியர் குடியிருப்பு, ஈரோடு 11.

**இடம்:** காளமங்கலம் குலவிளக்கம்மன்.

ஈரோட்டிலிருந்து கரூர் செல்லும் வழியில் கணபதிபாளையத்திற்கு அருகில் இருந்து காவிரி ஆற்றை நோக்கிச் செல்லும் பாதையில் உள்ளது. இங்கு அம்மன் சன்னதியை ஒட்டி ஈஸ்வரன் கோயில், சுப்பிரமணியர் கோயில் மற்றும் பெருமாள் கோயில் உண்டு.

**கோயில் சிறப்பு:** இக் கோயில் காவிரி ஆற்றின் தெற்குக் கரையில் காவிரிமுகமாக வடக்கு நோக்கி உள்ளது. இது கண்ணன் குலத்தவர்களின் குல தெய்வமாக விளங்குகிறது. இக் கோயிலைச் சுற்றிலும் உயரமாக மதில் சுவர் உண்டு. இக் கோயில் வளாகத்தில் அக்காலத்துக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இக் கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் என்பது கருத்து.

**திருவிழா.** இக் கோயிலின் திருவிழா பங்குனி மாதம் சுமார் ஒரு வார காலத்திற்கு மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இக் கோயிலின் வாண வேடிக்கை மற்றும் தெப்பத்தேர் மிகவும் புகழ் பெற்றதாக விளங்குகிறது.

**நிர்வாகம்.** கோயிலுக்கு தர்மகர்த்தா உண்டு. கோயிலுக்குச் சொந்தமான விளை நிலங்களும், தென்னைத் தோப்பும், கோயிலை ஒட்டி கோயில் நந்தவனமும் உண்டு. கோயிலில் தினமும் முக்கால பூஜைகள் சிறப்பாக நடைபெறுகின்றன. கோயிலுக்கு பூஜை செய்ய தொன்றுதொட்டு பிராமணர்களும், பண்டாரங்களும் வழிவழியாக வந்துள்ளனர். இக் கோயிலுக்குச் சிறப்பு மிக்க வரலாறு உண்டு. கோயிலில் அம்மன் புலியைக் காலுக்கடியில் வைத்து மிதித்துக் கொண்டு நிற்பது போல வடிவமைக்கப்பட்டுள்ளது.

---

# குன்னத்தூர் கோவில்களின் கல்வெட்டுக்கள்

ஆர். ரங்கராஜ், எம்.ஏ., எம்.பில்., ஆய்வாளர்,
தமிழ்த் துறை, பாரதியார் பல்கலைக் கழகம், கோவை-46.

* * *

(சுருக்கம்)

பெரியார் மாவட்டம் குன்னத்தூரில் உள்ள கோவில்களில் கிடைத்த கல்வெட்டுக்களின் மூலம் இன்று 'குன்னத்தூர்' என வழங்கப்படுகிற அன்று 'குன்றத்தூர்' என வழங்கப்பட்டமை புலனாகிறது. குன்றத்தூர் - சோழர் காலத்தில் குறுப்பு நாட்டைச் சேர்ந்த ஊராக இருந்தது. இவ்வூரில் லட்சுமி நாராயணப் பெருமாள் கோவில், குன்ற புரீசுவரர் கோவில் என இரண்டு கோவில்கள் உள்ளன. இக்கோவில்களில் பத்திற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அவை சுந்தர பாண்டியன், வீரபண்டியன் போன்ற மன்னர்களின் காலத்தில் பொறிக்கப்பட்டவை. இக்கல்வெட்டுக்கள் அக்காலத்தில் சிறப்புற்றிருந்த சமயம், மக்கள் வாழ்க்கை, நிர்வாகம், அரசியல் போன்றவற்றை அறிந்து கொள்வதற்கு சிறந்த சான்றுகளாய் உள்ளன.

இவ்வூர்க் கல்வெட்டுக்களில் சில 'நன்மங்கலம் சிறக்க' என்று தொடங்குவது குறிக்கத்தக்கது. இக்கல்வெட்டுக்களைப் பற்றி ஆய்வு செய்து பார்க்கும்போது அக்காலத்தில் குறுப்பு நாட்டில் வாணிகமும், வேளாண்மையும் சிறந்திருந்தமை புலப்படுகிறது. 'வெள்ளிர வெளி' என்ற ஊரைக் காடு கெடுத்து உருவாக்கினார்கள் என்பதனை ஒரு கல்வெட்டு கூறுகிறது.

## கூவலூர்த் திருக்கோயில்

புலவர்: பொன் முகிலன், கூகலூர்.

கொங்கு நாட்டின் இருபத்து நான்கு நாட்டுப் பகுப்பினுள் ஒன்றான காஞ்சிக் கூவல் நாட்டின் தலைநகர் கூவலூரே. நட்டுராண்ட நாயகர் என்ற சிவன் கோயில் உள்ளது. கூவல் என்னும் சொல்லிற்குச் சிறிய கிணறு என்பது பொருள்.

இன்று, கோயில் ஊருக்கும் புறத்தேயும் வயல்களை ஒட்டியும் அமைந்திருக்கிறது. கூவலூர்க் கோயிலின் பழமையை மெய்ப்பிக்கும் மூன்று பழங்காலக் கல்வெட்டுக்கள் மூன்று அண்மைக்கால கல்வெட்டுக்களும் இக்கோயிலில் உள்ளன.

## அருள்மிகு செல்லியாண்டியம்மன்.

இலக்கியச் சிறப்பு எய்தியுள்ள கூவலூரில் எழுந்தருளியுள்ள சக்தியே செல்லியாண்டியம்மன் என்னுஞ் செழும்பெயர் பெற்றுள்ளார். செல்லியாண்டியம்மன் என்ற பெயரை செல்லி, ஆண்டி எனப் பிரிக்கலாம். செல்லி என்னும் பெயர் மதிப்புடையவள் எனப் பொருள்படும். ஆண்டி என்பது ஆள்பவள் எனப் பொருள்படும். இரண்டையும் சேர்த்துக் கூறின் மதிப்பாளுமையுடையவள் என்பது ஆகும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அமையப் பெற்ற இவ்வம்மன் கோயில் முன் மண்டபத்தை இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பெருமக்கள் திருத்தி அமைத்தமையை இங்கிருந்த கல்வெட்டு சொல்லுகிறது.

# கோட்டமாளம் கோயில்

பேராசிரியர்: கோ. ரெங்கராஜலு

தமிழ்த்துறை

சிக்கய்ய நாய்க்கர் கல்லூரி

ஈரோடு - 4

பெரியார் மாவட்டம் தாளவாடி ஊராட்சி ஒன்றியம், திங்களூர் ஊராட்சியில் மலைப் பகுதியில் கோட்டமாளம் என்ற ஊரின் நடுவில் மேட்டுப் பகுதியில் ஒரு பழமையான கோயில் உள்ளது. அது ஒரு வைணவக் கோயில் ஆகும்.

கண்ணன் உருவம் உள்ளது.
இரண்டு நாகப் பிரதிஷ்டைகள் உள்ளன. தலைப் பகுதி சூடுபீடத்தில் ஒன்றில் கண்ணன் நர்த்தன கோலமும் மற்றொன்றில் சிவலிங்கமும் உள்ளன. இது சைவ வைணவ ஒற்றுமையைக் காட்டுகிறது.

இக்கோயில் பகுதியில் கி.பி. 15 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டும் நடுகல்லும் அருகருகே உள்ளன. நடுகல்லில் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. கல்வெட்டில் நடுகல் பற்றிய செய்தி காணப்படுகிறது.

# கோயிலும் ஒரு மருத்துவமனையே

மருத்துவர் (திருமதி.) பி. லலிதாபாய், பி. ஐ. எம்.
உதவி மருத்துவ அலுவலர் (சித்தா)
அரசு ஆரம்ப சுகாதார நிலையம்,
சித்தோடு (பெரியார் மாவட்டம்)

மனித சமுதாயத்தில் ஒவ்வொரு குடும்பமும் ஒரு தலைவனைச் சுற்றி தன்னுடைய குடும்பத்தை அமைத்துக் கொள்வது போல் மக்களும் ஊர்கள் தோறும் ஒரு கோவிலை அமைத்து அதைச் சுற்றி தங்களுடைய வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டார்கள். எனவே தான் "கோவில் இல்லாத ஊரில் குடி இருக்க வேண்டாம்" என்ற பழமொழி மக்களிடையே பரவலாகக் காணப்படுகிறது.

மனிதனின் உடலும், உள்ளமும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறுபட்ட இடர்பாடுகளுக்கு உட்படுத்தப்படுகின்றது. இவ்விடர்பாடுகளே மன நோயாகவும், உடலின் பல்வேறு அங்கங்களின் மூலம் வெளிப்படுகின்ற நோயாகவும் காணப்படுகின்றன. இவைகள் இடம், காலம், உணவு முறை இன்ன பிற மாற்றங்களின் காரணமாக உள்ளத்திலும், உடலிலும் நோய்களை ஏற்படுத்துகின்றன. அவைகளுக்கு ஒரு வடிகாலாக அமைவதுதான் கோயில். கோவிலின் அமைப்பு கோவிலில் பருவ காலங்களில் நடக்கும் திருவிழாக்கள், தினமும் நடக்கும் பூஜை முறைகள், மற்ற சடங்குகள், அங்கே இறைவனுக்கு அர்பணிக்கும் பொருட்கள் ஆகிய எல்லாம் மருத்துவ முக்கியத்துவம் பெற்றவைகளாக இருக்கின்றபடியால் கோயில்களை நாம் ஒரு மதநோக்கோடு பார்க்காமல் பார்ப்போமேயானால் அவைகள் நமக்கு வெளிப்படுத்துவது முழுவதும் கோயில் உளப் பிணியையும், உடல் பிணியையும் தீர்க்க வைத்த நிலையான ஒரு பொருளை அடைவதற்கு வழிகாட்டுவதாக அமைகின்றது. மருத்துவ மனைக்கு மன நோயை தீர்ப்பதற்கும், உடல் நோயைத் தீர்ப்பதற்கும் செல்கின்றோம். அதே கருத்தை நம்முடைய பெரியவர்கள் மனதில் வைத்துக் கொண்டுதான் இக் கோயில்களை அமைத்திருக்கிறார்கள் என்பதை சிறிது சிந்தனை செய்து பார்த்தால் நன்கு புலப்படும்.

இக் கருத்தைத்தான் பல்வேறு எடுத்துக்காட்டுகள் மூலம் நான் உங்களுக்கு விளக்கிக் கூற விரும்புகின்றேன்.

---

## சித்திர மேழிக் கோயில்கள்

(செல்வி அ. புவனேசுவரி, தமிழ்த் துறை,
கே. ஜி. பெண்கள் மேல்நிலைப்பள்ளி,
அன்னூர் 638 653).

. . .

சித்திரமேழிப் பெரியநாடு தமிழகத்தில் கி.பி. 8-ம் நூற்றாண்டிலிருந்து செல்வாக்குப் பெற்றிருந்தது. அதனுடைய அரசியல் அதிகாரம் கி.பி. 12-13ம் நூற்றாண்டில் உச்சக்கட்டத்தை அடைந்தது. அரசு செல்வாக்கு இழந்த இதனுடைய அதிகாரம் நாடு முழுதும் பரவியிருந்தது. கொங்கு நாட்டில் சித்திரமேழிப் பெரிய நாடு பல ஊர்களிலும் அதனுடைய ஆதிக்கத்தைச் செலுத்தியது.

கொங்கு நாட்டில் குழுக்கள் ஆட்சி நிலைப் பெற்றது. ஒவ்வொரு குழு-வினரும் தங்களுக்கென கோயில்களைக் கட்டிக் கொண்டு வழிபாடு செய்தனர். அக்கசாலீசுவரம், ஆனைக்கீசுவரம், ஐந்நூற்றீசுவரம் போன்ற எல்லாப் பெயர்-களிலும் கோயில் கட்டப்பட்டது. இக்கோயில்களை அந்தந்தக் குழுக்களே போற்றிப் பாதுகாத்து வந்தன. இது போன்ற ஒரு குழுதான் சித்திரமேழிப் பெரியநாடு. அந்தக் குழு கட்டிய கோயில்களுக்கு அந்தப் பெயர் வைக்கப்பட்டது.

சித்திரமேழிப் பெரியநாடு செல்வாக்குப் பெற்றமையால் இதன் பெயரால் சித்திரமேழி ஈசுவரமுடையார், சித்திரமேழி விண்ணகரம், சித்திரமேழி தட்டான், சித்திரமேழிபட்டன் போன்ற அமைப்புகளையும் பணியாளர்களையும் உருவாக்கும் நிலையேற்பட்டது. இவர்கள் வாணிகம், அரசியல், வேளாண்மை ஆகியவற்றில் ஆதிக்கம் செலுத்தினர்.

இக்கட்டுரையில் சித்திரமேழிப் பெரிய நாட்டிற்கும் அப்பெயர் கொண்ட கோயில்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றி ஆய்வு செய்யப்படும். பெரியார் மாவட்டத்தில் சித்திர மேழி பெயர் கொண்ட கோயில்கள் மிகுந்து காணப்படுகின்றன. அதற்கான காரணத்தையும் இக்கட்டுரையில் கண்டு காட்டப்படும்.

* * *

# சிவங்கொம்பு முனியப்பன் கோயில்

சோம. ஈஸ்வரன்
முத்தாயிபாளையம் (அ. நி)
கணபதிபாளையம் (வழி)
பெரியார் மாவட்டம்
த.பெ.எண். 638 153.

இக் கோயில் ஈரோட்டில் இருந்து கொடுமுடி செல்லும் பாதையில் சின்னமாபுரத்தில் இருந்து காவிரி ஆற்றுக்கு செல்லும் வழியில் காவிரிக் கரையில் உள்ளது. இங்கு முனியப்பன் கோயிலும், பிள்ளையார் கோயிலும் அருகருகில் உள்ளன.

இக் கோயில் காவிரியாற்றின் தென்கரையில் காவிரியைப் பார்த்தவாறு அமைந்துள்ளது. பிள்ளையார் கோயில் முனியப்பன் கோயிலுக்குத் தெற்கில் வயல் பகுதிக்குள் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. பிள்ளையார் கோயிலின் உட்புறத்தில் கல்வெட்டுகள் பல அமைந்துள்ளன. இக் கோயிலுக்கு சொந்த நிலம் உண்டு. இப் பிள்ளையார் கோயில் மிகவும் பழையதாக காட்சியளிக்கிறது. முனியப்பன் கோயில் சுமார் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம்.

முனியப்பன் கோயில் குயவர் என்று அழைக்கப்படும் கொங்கு நாட்டு மண்ணுடையார் இன மக்களின் குல தெய்வமாக உள்ளது. ஆண்டுக்கு ஒரு முறை அம் மக்கள் கிடா பொங்கலுடன் திருவிழா கொண்டாடப்படுகிறது. முனியப்பனுக்கு காலத்தால் முற்பட்ட பிள்ளையார் கோயில் அவ்விடத்தில் அமைந்து இருந்த தொன்மையான குடியிருப்பின் எச்சமாக விளங்குகிறது. மேற்கண்ட கோயில்களுக்கு குயவர் இன பெரியவரே பூசாரியாக உள்ளார்.

---

# தலையநல்லூர் பொன்காளியம்மன் கோயில்

பெ.கு. சாந்தகுமார்
பெரியூர் கொளாநல்லி அஞ்சல்,
பெரியார் மாவட்டம்.

ஈரோட்டிலிருந்து சிவகிரி செல்லும் வழியில் சிவகிரிக்கண்மையில் தலையநல்லூர் பொன்காளியம்மன் கோயில் உள்ளது. வடக்குநோக்கி அமைந்துள்ள பொன்காளியம்மனின் காவல் தெய்வமாக விளங்குவது வண்ணாரக் கருப்பணன்.

பொன்காளியம்மன் கொங்குவேளாளர்களின் கூறை குலத்தவர்க்கும், விளையன் குலத்தவர்க்கும் குலதெய்வமாக உள்ளது. கொங்கு செட்டியார், கொங்கு புலவர் ஆகியோரும் இக் கோயிலைக் குலதெய்வமாக கொண்டு வழிபடுகின்றனர்.

இக் கோயிலுக்கு ஓலைச்சுவடியில் அமைந்த பாடல்கள் உள்ளன. இக் கோயில் சுவர்களில் கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

பங்குனி மாதம் இக் கோயிலுக்கு திருவிழாக் கொண்டாடப்படுகிறது. திருவிழாவின்போது பக்தர்கள் எல்லோரும் ஆளுக்கொரு பந்தம் பிடித்து வழிபடும் முறை இக்கோயிலுக்கே உரிய தனிச் சிறப்பாகும். இக் கோயிலில் தேர் எடுத்துச் செல்லும் வழக்கமும் உண்டு.

இக் கோயிலின் முன்புறம் பாம்பாட்டிச் சித்தர் சிலை ஒன்று உள்ளது. இத் தெய்வத்தின் முன்பு காலை மூன்று மணியிலிருந்து ஆறு மணிவரை பல்லி சகுனம் பார்க்கும் வழக்கம் உள்ளது. இக் கோயிலின் உற்சவ மூர்த்திக் கொற்றவை.

---

## திங்களூர்க் கோயில்கள்.

டாக்டர். பெ. சண்முகம் எம்.ஏ.பி.எச்.டி. தமிழ்ப் பேராசிரியர்.
ஸ்ரீ வாசவி கல்லூரி ஈரோடு.

கொங்கு நாட்டில் குறுப்பு நாட்டுத் திங்களூர் சிறந்த வரலாற்றுத் தலம் ஆகும். இவ்வூரில் சந்திரமௌலீஸ்வரர் ஆலயம், சுந்தரபாண்டியன் விண்ணகரம் என்னும் அழகப் பெருமாள் கோயில், சந்திர வசதி என்னும் சமணர் ஆலயம் என்பன உள்ளன. இவற்றில் கல்வெட்டுகள் பொருந்தியுள்ளன. இவை அக்கால மன்னரின் ஆட்சிச் சிறப்பு கடவுளர்களின் சிறப்பு, அடியார்களின் பக்திச் சிறப்பு, கொடைச் சிறப்பு முதலியவற்றை விளக்குகின்றன

### 1. சந்திர மௌலீஸ்வரர் கோயில்.

திங்களூரின் வடஎல்லையில் இக்கோயில் அமைந்துள்ளது. கோயில் கருவறை, மேகலகோபுரம், அர்த்தமண்டபம், முகமண்டபம், சுற்றுப் பிரகாரம் என்பன உள்ளன. வெளிப்புறம் விநாயகர், பலிபீடம், கருட கம்பம் என்பன உள்ளன. கருவறை, அர்த்த மண்டபம் முகமண்டபத் தூண்கள் ஆகியவற்றில் கல்வெட்டுகள் உள்ளன. இராசராசச் சோழரின் ஆட்சியில், விக்கிரமச் சோழ தேவர் என்னும் கொங்குச் சோழரின் பார்வையின் இப்பகுதி இருந்து வந்தது. பாண்டி நாட்டு நல்லூருடையான் அம்மையத் தேவன் பெருமாள் குமாரபாலன் இக்கோயில் முகமண்டபத்தை அமைத்து உள்ளார். இக்கோயில் இறைவன் பெரிய இலிங்கமாக உள்ளார். சோழ நாட்டு இலிங்கங்களை இவ்விறைவன் நினைவு படுத்துகிறார். கருடகம்பம் மிக அழகாக உள்ளது. நின்ற நிலை விநாயகர் சிவலிங்கத்திற்குப் பசு பால் சொரிதல், கோதண்டபாணி சிற்பங்கள் இதில் அழகாக உள்ளன. இதன்முன் நிலையில் அரிகண்டச் சிற்பமாக நிற்கும் சோழர் கால வீரன் தன் உடை வாளால் தன் கழுத்தை அரிந்து கொள்கிறான்.

### 2. சுந்தரபாண்டிய விண்ணகரம் என்ற அழக பெருமாள் கோயில்.

திங்களூரின் கிழக்குப் பகுதியில் கிழக்கு நோக்கிய சந்நிதியாகும் இக்கோயில், இக்கோயிலுக்குக் கோபுரம் இல்லை. முன்பகுதியில் கருட கம்பம் உள்ளது. இதில் மகுடஞ்சூடிய கருடாழ்வார், கோதண்டபாணியாகிய இராமர், அனுமன் சங்கு சக்கரம் சிற்பங்கள் அழகாகக் காட்சி தருகின்றன.

கோயிலுள்ளே நுழைவாயில் மண்டபத்தில் தூணில் கோயில் திருப்பணி செய்த அடியார்கள் உள்ளனர். இதன் முக மண்டபத் தூணில் நரசிங்கம் இரணியன் கடும்போர்க் காட்சியும் மடியில் இரணியனைத் தாங்கிய நரசிங்கத்தின் காட்சியும் அழகாக உள்ளன. இக் கோயிலில் அழகப் பெருமாள் நின்ற கோலத்தில் காட்சி அளிக்கின்றார். இக் கோயிலின் முப்புறமும் கல்வெட்டுக்கள் உள்ளன. இவை இக்கோயில் திருப்பணிகளை விளக்குகின்றன.

### 3. திங்களூர் சந்திர வசதிக் கோயில்

இது சமணர் கோயில். கிழக்கு நோக்கி உள்ளது. கருவறை, கோபுரம், அர்த்தமண்டபம், முகமண்டபம்' கொண்டுள்ளது. எட்டாம் தீர்த்தங்கரர் சந்திரபிரபர் கருவறையில் யோக நிலையில் முக்குடையின் கீழ் அமர்ந்து காட்சி தருகின்றார். ஒரு புறம் புஷ்ப நாதர் என்ற தீர்த்தங்கரர் குதிரை பீடத்தின் மேல் நின்ற நிலையில் திருவருள் புரிகின்றனர். பல சமண முனிவர்கள், விநாயகர், நான்முகன், பாயும் குதிரை, பாயும் புலி. மீன்கள் சிற்பங்களில் உள்ள. முகப்பு மண்டபம் கோராட்டான விக்கிரம சோழத் தேவர் காலத்தில் மாணிக்கஞ்செட்டி என்பவர் எழுப்பித்துள்ளார்.

# திருப்பாண்டிக் கொடுமுடி

க.ஆ.திருஞானசம்பந்தம், எம்.ஏ.,எம்.பில்,
தமிழ்ப் பேராசிரியர்,
சிக்கையா நாயக்கர் கல்லூரி, ஈரோடு.4.

. . .

## திருப்பாண்டிக் கொடுமுடி :

'கொடுமுடி' என்னும் குறுநில மன்னன் பெயரால் அமைந்த சங்ககால ஊர்.

ஞானசம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகரால் போற்றப்படும் தேவாரத்தலம். சைவ வைணவரது சமய ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டு.

வேள்விக்குடிச் செப்பேடு தந்த மன்னன் தேர் மாறனால் போற்றப்பட்ட பகுதி; சர்பிரான்சிஸ் புக்கானன் 1800-ல் கொடுமுடி பற்றிக் குறிப்பிடும் சேதி :

## இலக்கியத்தில் கொடுமுடி :

ஆமூர் கௌதமன் சாதேவனார் புகழாரம். கொடுமுடிக்கு, கபில தேவ நாயனார் 11-ஆம் திருமுறையில் போற்றுதல்.

## கொடுமுடித் திருத்தலம் :

கோவிலின் அமைப்பும் இறைவன் திருவுருவங்களும், இறைவனின் திருநாமங்கள்.

## காவிரி கண்ட விநாயகர் :

மணிமேகலை, கொங்குமண்டல சதகம்.

## கொங்கின் அருங்கலைச் செல்வம் :

விஷ்ணுவின் அரியதிருமேனி.

## திருவிழாக்கள் :

பழமையின் பிடியில் கொங்கின் நாட்டுப் புறக் கலைகளின் செல்வாக்கு பங்குனி உத்திரத்திருநாளில் கொடுமுடியில்

## கல்வெட்டுச் செய்திகள் :

சுந்தரபாண்டியன் இரவிவர்மன்

## தண்டிகைக் காளியண்ணன் :

பல்லவர்கால எச்சங்கள்.

## கொடுமுடியில் காசுகள் :

கட்டுரை எழுத துணைபுரிந்த இலக்கியங்கள்.

"ஆகெழு கொங்கர் நாட்டில் குருவருள் முந்நூற்று என்பது சிவாலயம் கொங்கெழு தேவர் சபையும் கொல்லிமலை, வெள்ளிமலை, தலைமலை வராககிரி தொழுத்தலவு

கொங்கு நாட்டில் -

பாருளோர் புகழ் கறை, அன்பர் கொடுமுடிலிங்கர்
பங்கில் வடிவுரை மங்கையும்
பூசரித்திடும் அன்பர் அகிலமிசை நீடூழ்
அந்தினமும் மிக வாழ்வர்".

. . . .

# <u>பண்டைய கொங்கு நாட்டு மக்கள் இசை</u>

திரு. என். எம். சுப்பாராமன்
விற்பனை அலுவலர்,
டான்சி விற்பனை நிலையம்
கோயம்புத்தூர் – 18.

மனித சமுதாய வளர்ச்சி – ஒரு காலக் கட்டத்தில் எல்லா இனத்தினரும் வேட்டையாடி வாழ்ந்தனர். கொங்கு நாட்டு பழங்குடியினரும் அவ்வாறே. குறிஞ்சி நில மக்கள் குறவர் – குன்றக் குறவர் குறிஞ்சியும் முல்லையும் திரிந்து பாலையானது. குறிஞ்சி நிலமக்கள் பாலை நிலத்தில் வேட்டுவர் ஆனது. ஆறலைக்கள்வராக மாறியது, சேர நாட்டிற்கு கடல் வழியாக வந்த பொருட்கள் சோழநாடு முதலியவற்றிற்கு வரும் வழி – போரூர், அவிநாசி – பெருந்துறை, ஈரோடை வழி.

இம்மக்கள் ஆடிமகிழ்ந்த இசையின்றி பறைக்குத் தக்கவாறு ஆடுதல் – கூத்துக்குப்பின் இசை எழுந்தது. அறச்சலூர் கல் வெட்டில் ஜதிகள் கூறப்பட்டுள்ளது. குறிஞ்சிப் பண் – பின் பாலைப் பண்.

இது பற்றிய இளம்பூரணர் கூற்று – குறிஞ்சி நிலப் பண் குறிஞ்சியும், பாலை நிலப்பண் பாலையும் ஆதல். பாலை நிலத் தெய்வம் காடுகள் ஆதல், குறிஞ்சிக்குக் கடவுள் – முருகன் ஆதல் – இதனை இவர்கள் பண்டு தொட்டு முருகனையும் காளியையும் – காளி கோயில்களில் முதன்மை – முருகன் வேடுவப் பெண் மணந்த வரலாறுகள் –

<u>இசை இலக்கணம்:</u>– யாப்பெருங்கலக் காரிகையில் கண்ட இசைச்சுருக்கம்:–

குரல் துத்தம் கைக்கிளை, உழை இளி, விளரி, தாரம் முதலிய சுரங்கள்.

பெரும்பண்கள் நான்கு – யாழ் நால்வகை பண் பண்ணியில் திறம் திறத்திரம், யாழ் முறையும் குழல் முறையும், இடமுறைத்திரிபும் வலமுறைத்திரிபும்' தாரத்து உழை தோன்ற பாலை யாழ் – பஞ்சமரபு குரல் குரலாக வருமுறைப் பாலையில் துத்தம் குரலாய அத்தீபம் குறிஞ்சி – குறிஞ்சியும் பாலையும் இடமுறைத் திரிபில் வருதல். குறிஞ்சிக்கும் பாலைக்கும் நேரான தற்கால இராகங்கள் இவை எனத் தெளிதல் – சங்கராபரணம், கல்யாணி, கரகரப்பிரியா, அரிகாம்போதி இதில் ஒவ்வொன்று ஆதல்.

# பவானி சங்கமேசுவரர் கோயில்

கி. ஸ்ரீதரன்,
தொல்பொருள் ஆய்வுத்துறை,
சென்னை 28.

பவானியல் பவானியும் காவிரியும் கூடும் இடம் கூடுதுறை என்றழைக்கப்படுகிறது. இங்குள்ள கோயில் சங்கமேசுவரர் கோயில் என அழைக்கப்படுகிறது. பல்லவர் கால சிற்பங்களும், இவ்வூருடன் பாண்டியர் தொடர்பு பற்றிய வேள்விக்குடி செப்பேட்டின் குறிப்பும், சோழர் காலத்தில் திருப்பணி நடந்ததாக சோழன் பூர்வ பட்டயம் கூறும் செய்திகள் ஆகியவை இக்கோயிலின் பழமையை எடுத்துக் கூறுகிறது. இக் கோயில் சுத்துத் திருமாளிகை, முன் நிருத்த மண்டபம், சிகரம், பண்ணாரி மாரியம்மனுக்கு கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், கோபுரம், மதில் உண்டாக்கி லிங்கம் பிரதிஷ்டை செய்தவர் இம் முடி கெட்டி முதலியார் ஆவார். வேத நாயகி கோயில் முன் மண்டப விதானத்தில் கி.பி. 1645 ஆம் ஆண்டு கல்வெட்டு காணப்படுகிறது. அம் மண்டபத்தைக் கட்டியவர் இம்முடி செட்டி முதலியாரின் மனைவி சின்னம்மையார் என்று கூறுகிறது.

திருஞான சம்பந்தர் பவானியைப் பற்றி பக்தி சுவையும், இலக்கிய நயமும் கொண்ட பதிகத்தை பாடியுள்ளார். புகழ் பெற்ற பாடல் பெற்ற சிவத்திருத்தலம்.

-----

# பாரியூர் திருக்கோயில்

(புலவர் கு.ச. சென்னியப்பன், எம்.ஏ. எம்.எட். எம்.ஃபில்
முதுகலை தமிழாசிரியர், நகர்மன்ற மேனிலைப் பள்ளி
கோபிசெட்டிபாளையம்)

## கட்டுரையின் சுருக்கம்.

கொங்குநாட்டில் பெரியார் மாவட்டத்தில் பழம்பெருமையும் சிறப்பும் புதுப்பொலிவும் பசுமையும் உடைய ஊர் பாரியூர். பாரிவள்ளலை நினைவூட்டும் இப்பாங்கமைந்த ஊரில் உள்ள சிவன் கோயில் இப்பொழுது மிகுந்த பொருட்செலவில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இது ஐந்துவிடங்கத்தலங்களுள் ஒன்று ஆகவும் மிளிர்கிறது.

இங்கு ஆறு கல்வெட்டுக்கள் உள்ளன. இவை ஆறும் புதுத பொருள் ஆக்கப்பட்டு உள்ளது. எனினும் அனைத்தும் படியெடுக்கப்பட்டுள்ளன. இக் கல்வெட்டுக்களால் பல அரிய செய்திகள் புலப்படுகின்றன. அன்று இச் சிவபெருமான் அமரவிடங்கேசுவரர் என அழைக்கப்பட்டுள்ளார். இன்றோ அமரபணீசுவரர் என வழங்கப்படுகிறார்.

ஆறுகல்வெட்டுக்களில் திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ஆட்சிக் காலத்தில் இரண்டும், வீர பாண்டியன் ஆட்சிக் காலத்தில் மூன்றும், ஒய்சால மன்னன் வீரவல்லாள தேவன் ஆட்சிக் கால கல்வெட்டு ஒன்றுமாக உள்ளன.

இவற்றில் கொங்கு நாட்டின் நாட்டுப் பிரிவுகள், இறைவனுக்குச் சந்தியாதீபம் வைத்தமை, நிலம் கொடுத்தமை பற்றிக் கூறப்பட்டுள்ளன.

மேலும் இங்கு பெருஞ்சிறப்பு பெற்று விளங்கும் அருள்மிகு கொண்டத்துக் காளியம்மன் கோயில் பற்றியும் அம்மையின் அருள் பற்றியும் அருள் பெற்ற சித்தர் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

---

# பூந்துறைக் கோயில்கள்

(பேராசிரியர் கா.அரங்கசாமி, எம்.ஏ., எம்.ஃபில்
தமிழ்த்துறைத் தலைவர், கோபி கலைக்கல்லூரி, கோபி)

.....

**முன்னுரை:** "பொன்னிநதி வானிநதி காஞ்சி நதி
சூழ்கின்ற பூந்துறை நாட்'டின் முதன்மைத் தலைநகர் பூந்துறை. சங்கச் சான்றோர் போற்றும் "புன்துறை"யின் பெயரால் புகழ் மேம்பட்ட பூந்துறை வரலாற்றுப் புகழ்மிக்க ஊராகும். பதின்மூன்று கோயில்களைக் கொண்டிலங்கும் பூந்துறை இறை மாட்சியில் இலங்கும். புகழ் மேம்பட்ட பாங்கினையும் கோயில்களின் தோற்றம் அமைப்பு கலைப்பாங்கு வழிபாட்டுமுறை தனிச்சிறப்புப் பற்றியும் இக்கட்டுரை ஆய்கிறது.

**கோயில்கள்:**

1) புட்பவனேசுவரர் கோயில்
2) பாகம்பிரியாளம்மை கோயில்
3) ஆறுமுகப்பெருமான் கோயில்
4) விசுவநாதர் கோயில்
5) விசாலாட்சி கோயில்
6) தாமோதரப் பெருமாள் கோயில்
7) அங்காளம்மை கோயில்
8) கரியகாளியம்மன் கோயில்
9) வலம்புரி விநாயகம் கோயில்
10) காடை விநாயகர் கோயில்
11) செல்வ விநாயகர் கோயில்
12) அய்யனார் கோயில்
13) பார்சுவநாதர் கோயில் (அம்மண ஈசுவரர் கோயில்)

**தேவாரத்தில் பூந்துறை:**

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் 'நாமார்க்கும் குடியல்லோம்' எனப் புரட்சி முழக்கமிட்ட அப்பர் பெருமான் தம் அடைவுத் திருத்தாண்டகத்தில் 11-வது திருப்பாசுரத்தில் பூந்துறையைக் குறிப்பிடுகின்றார். வழிபாட்டு நோக்கில் பூந்துறை குறிக்கப்படுவது முதன்முறையாகத் தேவாரத்தில் தான் என்பது நோக்கத்தக்கது.

**செப்பேடும் கல்வெட்டும்:**

சேரமன்னன் கோ ரவி கோதையின் செப்பேடு ஒன்று பூந்துறைப் புட்பவனநாதர் கோயில் மதிற்சுவரிலிருந்து எடுக்கப்பட்டது. அச்செப்பேடு எழும்பூர் அருங்காட்சியகத்தில் 1966-67 ஏ.ஆர்.இ. செப்பேடு எண் ஏ5 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இச்செப்பேட்டின் தனிச்சிறப்பு தமிழ், கிரந்தம், தட்டெழுத்து மூன்றும் கலந்து வெட்டப்பட்டுள்ளமையாம். புட்பவனநாதர் பாகம்பிரியாளம்மை கோயில்களில் இன்றும் காணக்கிடக்கும் 5 கல்வெட்டுக்கள் வரலாற்றுச் சிறப்புடையன. புட்பவனநாதர் கோயில் முகப்பில் உள்ள இரு கல்வெட்டுக்கள் திருப்பணி பற்றிக் குறிப்பன. கல்வெட்டுக்கள் யாவும் விசயநகர ஆட்சிக் காலத்தனவும், பிற்பட்டனவுமாகும்.

**கரியகாளியம்மன் கோயில்:**

அழியும் நிலையிலுள்ள இக்கோயிலின் தோற்றம் மிக்க பழமையுடையது. கரிகாலன் கட்டியதால் புராணமும், செவிவழிச் செய்யும் கூறுகின்றன.

**புட்பவனநாதர் கோயில்:**

மேற்கு நோக்கிய கோயில் சேரமன்னர்கள் கட்டியது என்பர். இக்கோயிலின் தோற்றம் பற்றிப் பூந்துறைப் புராணம் சுவைபடக் கூறுகிறது. இக்கோயிலையொட்டி நந்தி சிவதுர்க்கை சண்டேசர், பிரம்மா, லிங்கோத்பவர், நவக்கிரகம், தனித்த சனீசுவரர் தான்தோன்றி ஈசுவரர், சிவசூரியன், தெட்சிணாமூர்த்தி முதலியன கோட்ட மூர்த்திகளாகவும், பரிவாரர்களாகவும் அமைந்துள்ளன. தெற்கு நோக்கிய ஆறுமுகப்பெருமான் கோயிலும் மேற்கு நோக்கிய பாகம் பிரியாள் கோயிலும் பழமையான தோற்றத்துடன் உள்ளன. இவ்விரண்டு கோயிற் சுவர்களிலும் மீன்வடிவம் பொறித்த கற்கள் பலவுள. புட்பவனநாதர் கோயில் கோபுரம் உட்படம் அதிஉக்டானம், மஞ்சவர்க்கம் மஞ்சவர்க்கத்தின் நடுவில் கோனவட்டம், சதுரவட்டம், 3 அடுக்கு விமானம் என்ற முறையில் முழுக்கால் வேலையாக அமைந்துள்ளது.

**பார்சுவநாதர் கோயில்-அம்மண ஈசுவரர் கோயில்:**

விசயநகர மன்னரின் கல்வெட்டுக் கொண்ட இக்கோயிலும் மிக்க பழமை வாய்ந்த தோற்றம் கொண்டது. இன்றும் சமணமும் பிறரும் இங்கு வழிபாடுசெய்து வருகின்றனர்.

**பிற கோயில்கள்:** மூன்று விநாயகர் கோயிலும், விநாயகரால் உருவாக்கப்பட்ட ஒருவாய்க்கிணறும், அங்காளம்மன், தாமோதரப் பெருமாள் கோயிலும் குறிப்பிடத்தக்கவையாகும். இவையாவும் புதுப்பிக்கப்பட்டமையால் பழமையான சான்றுகள் யாவும் கிடைத்தில.

**முடிவுரை:** ஏறத்தாழ ஈராயிரம் ஆண்டுக்கால வரலாற்றுச் சிறப்புமிக்க பூந்துறையில் சைவ வைணவ சமண சமயக் கோயில்கள் பலவும் அமைந்துள்ள சிறப்பும் அக்கோயில்களின் வரலாற்றுச் சிறப்பும் மேலும் ஆராயத்தக்கன.

* * *

# பெரிய சேமூர் கோயில்கள்

முனைவர்: அ. பொன்னுசாமி
தமிழ்த்துறை,
சிக்கய்யநாய்க்கர் கல்லூரி
ஈரோடு 4.

பெரியார் மாவட்டத்திலுள்ள ஈரோடு வட்டத்தில் பெரியசேமூர் கிராமம் உள்ளது. பெரிய சேமூர் கிராமத் தலைமையிடமாக விளங்குகிறது. ஈரோட்டில் இருந்து சித்தோடு செல்லும் சாலையில் 4–வது கிலோ மீட்டரில் இவ்வூர் அமைந்துள்ளது. இக் கிராமத்தின் பல இடங்களில் சிறு சிறு கோயில்கள் உள்ளன.

இக்கிராமத்திலுள்ள சேமலிங்கீசுவரர் கோயில் பழமை வாய்ந்தது. இன்று அங்காளம்மன் கோயில் என்று வழங்கப்படுகிறது. இக் கோயிலில் சிவலிங்கம், கருடகம்பம், நந்தி ஆகியவை உள்ளன. கிழக்குப் பார்த்த சிவாலயத்தின் இருபுறமும் முறையே தெற்கு, வடக்கு பார்த்த அங்களாம்மன், துர்க்கை கோயில்கள் உள்ளன. இவை அனைத்தையும் சேர்த்து வடக்கு பார்த்த சுற்றுச் சுவர் அமைந்துள்ளது. கோயில் சுவரின் பக்கவாட்டில் மீன் சின்னம் காணப்படுகிறது. இக் கோயிலின் மேற்கில் 200 மீட்டர் தொலைவில் செல்லியம்மன் கோயில் உள்ளது.

இச் கிராமத்தைச் சேர்ந்த எல்லா ஊர்களிலும் விநாயகர் கோயில்கள் உள்ளன. சேமூர், மாணிக்கம்பாளையம், முனியப்பம்பாளையம், எல்லப்பாளையம் பெரிய அக்ரஉறாரம், தண்ணீர்பந்தல்பாளையம், ஞானபுரம் ஆகிய ஊர்களில் மாரியம்மன் கோயில்கள் உள்ளன. கனிராவுத்தன் குளம் பேருந்து நிறுத்தத்திற்கு வடக்கில் ஒரு மசூதி காணப்படுகிறது.

இவை தவிர சூளை முனியப்பன் செங்கனி முனியப்பன் மடையன், கருப்பண்ணன், எல்லபாளையம் செல்லியம்மன், தொட்டியத்தக் கருப்பண்ணன், கருமாத்தி ஆகிய கோயில்களும் உள்ளன. இவற்றிற்கு ஆண்டுக்கொருமுறை திருவிழாக் கொண்டாடப்படுகிறது.

---

# பெரியார் மாவட்டக் கிருத்துவக் கோயில்கள்.

வே. ஜெயராஜ்.
காப்பாட்சியர், அரசு அருங்காட்சியகம்.,
ஈரோடு - 1.

இசரவேலரை எகிப்தின் அடிமைத் தனத்திலிருந்து கானான் தேசத்திற்கு மோசே என்ற தீர்க்கதரிசி அழைத்துச் சென்றபோது கடவுள் (கர்த்தர்) ஆலயம் எவ்வாறு அமைக்கவேண்டும் என்று தெரியப்படுத்தினார். 100 முழ நீளமும் 50 முழ அகலமும் கொண்ட அமைப்பிருள் மகாதூயதலம், தூயதலம், உட்பிரகாரம், வெளிப்பிரகாரம், சுற்றுப் பிரகாரம் போன்றவை இருக்கவேண்டும் என்று கூறினார். அதன்படி மோசே பயணம் செய்து கொண்டிருந்த காலத்தில் ஆசரிப்புக் கூடாரம் அமைத்தார்.

பின் சாலோமோன் அரசர் காலத்தில் கடவுள் (கர்த்தர்) காண்பித்த மாதிரியின் படியே கல்லால் பிரமாண்டமான ஆலயம் கட்டினார்.

கி.பி. 1ம் நூற்றாண்டில் கிருத்துவின் சீடர் தோமா இந்தியாவிற்கு இயேசு கிருத்துவையும் அவரது அன்பினையும் அறிவிக்க வந்தார். கேரள மாநிலத்தில் கோயில்கள் கட்டப்பட்டன. அதனைத் தொடர்ந்து கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் 1606 ல் மதுரையில் உருவான கிருத்துவ சங்கத்தாரால் (Jesuit Mission) பெரியார் மாவட்டப் பகுதிகளில் கிருத்துவப் பணி தொடங்கப்பட்டது. 1606 ல் தாராபுரத்தில் ஒரு ஆலயம் இருந்ததாகத் தெரிகிறது. ராபர்ட் டி நொபிலி என்ற திருத்தூதுவர் சத்திய மங்கலத்தில் ஒரு கிருத்துவ சங்கத்தை நிறுவினார். 1652ல் சத்திய மங்கலம் பகுதியில் 15 கிருத்துவக்கோயில்கள் எழும்பின. சத்திய மங்கலத்திலிருந்த பாளையக்காரர், மைசூர் அரசர்கள் கிருத்துவத்திற்கு ஆதரவாக இருந்தனர்.

1856ல் "லிப்சீக்" (Life Seek) என்ற கிருத்துவ சங்கம் தொடங்கப்பட்டது. அதனது உழைப்பால் கி.பி. 1888ல் ஈரோட்டில் தமிழ் சுவிசேஷ லுத்தரன் திருச்சபையின் கிருத்துவக் கோயில் கட்டப்பட்டது.

1875ல் ஈரோட்டில் தூய மரியன்னை ஆலயம் கட்டப்பட்டது. பின் அது புதுப்பிக்கப்பட்டது.

லண்டன் சங்கம் (London Mission) மூலமாக அந்தோணி வாட்சன் பிரபி என்ற திருத்தூதுவர் 1897ல் ஈரோட்டுக்கு அனுப்பப்பட்டார். 20க்கு மேலான கிருத்துவக் கோயில்களைக் கட்டினார். அதில் சிறப்புடையது ஈரோட்டிலுள்ள கோயில். 1929ல் கட்டி முடித்தார்.

1908ல் மொரிவெதர் என்ற திருத்தூதுவர் வந்து குறிச்சி பகுதியில் தொண்டாற்றினார். இலங்கை இந்திய பொதுச் சங்கம் மூலமாக பல கோயில்கள் கட்டப்பட்டுள்ளன.

20ஆம் நூற்றாண்டில் "பெந்தே கோஸ்தே சங்கங்கள்" பெருமளவில் உருவாகி உள்ளன. இச்சங்கங்கள் கட்டிடங்களுக்கு சிறப்பு கொடுக்காமல் சிறிய சிறிய கட்டிடங்களில் வழிபட்டு வருகின்றனர்.

- - - - --

# பெரியார் மாவட்டத்தில் கிராம தேவதைகள்.

முனைவர் எஸ். தேவகி

வரலாற்றுத் துறைத் தலைவர்,

வேளாளர் மகளிர்க் கல்லூரி, ஈரோடு.

தமிழ் நாடு கோயில்கள் மிகுந்த பகுதி. எனவேதான் தமிழ் நாடு மாநிலச் சின்னம் கோயில் சின்னமாக உள்ளது. ஒரு நாட்டின் அரசருக்குப் பரிவாரங்கள் இருப்பது போல சிவனுக்கும் பரிவாரம் இருப்பதாக மக்கள் எண்ணத் தொடங்கினர். இப்பரிவாரங்களே நாளடைவில் கிராமத் தேவதைகள் என்று அழைக்கப்பட்டனர். மக்களைப் பாதுகாத்து விளைச்சலைப் பெருக்கிக் கொடுக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் சிறு தெய்வ வழிபாட்டு முறைக்கு பெரியார் மாவட்டத்தில் வாழும் கொங்கு வேளாளர்கள் இன்றும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

சிற்றூர்களைக் கிராமங்கள் என்ற பெயரால் குறிப்பிடலாம். சிற்றூர் மக்கள் தங்கள் ஊர்களிலோ அல்லது மற்ற இடங்களிலோ வைத்து வழிபடும் தெய்வங்களைக் கிராம தேவதைகள் என்று கூறலாம். இவை சிறு தெய்வங்கள் என்று அழைக்கப்படுகின்றன. அவற்றை ஆண்பால் தெய்வங்கள், பெண்பால் தெய்வங்கள் என்று இருவகைப் படுத்தலாம். முனியப்பன், கருப்பணன், விநாயகன், வீரமாத்தி, ஐயனார், அண்ணமார் ஆகியவை ஆண்பால் தேவதைகள்; மாரியம்மன், காளியம்மன், பிடாரியம்மன், கொங்காலம்மன், பொங்கியம்மன், வனகாளி, பத்ரகாளி, துர்க்கையம்மன், கன்னிமார் போன்றவை பெண்பால் தேவதைகள்.

இவை தவிர பாம்பு, பருந்து நரி போன்றவற்றிற்கும் கிராமங்களில் வழிபாடு நடக்கிறது.

# பெரியார் மாவட்டத்தில் சித்தர் கோயில்கள்

டாக்டர் கா. பழனிச்சாமி, பி.ஐ.எம்.
மாவட்ட சித்த மருத்துவ அலுவலர்,
மாவட்ட சித்த மருத்துவ அலுவலகம்
பெரியார் மாவட்டம், ஈரோடு.

---

நம் நாட்டு மக்கள் சிறந்து விளங்கிய பெரியோர்களுக்கு நடுகற்களை நட்டு அவர்களின் செயல்திறன் எப்பொழுதும் மக்கள் மனதில் நிலை நிறுத்தச் செய்தார்கள். அவைகளே தற்போது கோயில்களாக மாறி இருக்கின்றன.

திராவிட நாகரீகத்தில் இந்நடுகற்கள் முக்கியமான பங்கை வகிக்கின்றன. சித்த மருத்துவம், சைவசித்தாந்த கொள்கைகளையும், திராவிட நாகரீகத்தையும் அடிப்படையாக கொண்டு எழுந்த ஒன்றாகும். எனவேதான் சித்தர்கள் அநேகமாக சமாதி எய்தினார்கள் என்று கூறுகிறார்கள். இச் சித்தர்கள் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கொள்கையைக் கொண்டிருந்தார்கள். முதற்கட்டமாக நோய்வராமல் பாதுகாத்துக் கொள்வது எப்படி என்ற முறைகளைக் கூறிவந்தார்கள். இவர்கள் தங்களுடைய நாவன்மையால் மக்களுக்கு பலவிதமான அறிவுரைகளைக் கூறி மன நோய்களைப் போக்கியும், மூலிகை, உலோகம், உப்பு, உபரசம், பாடாணம், விலங்கினப் பொருட்கள் போன்றவைக் கொண்டு மருந்துகள் செய்தும் மக்களுடைய உடல் நோயையும் போக்கினார்கள். அவர்கள் மணி, மந்திரம் ஆகியவைகளைக் கொண்டும் நோய்களைப் போக்கினார்கள். இப் பெருமக்கள் தற்காலத்தில் இருக்கும் மிக நுணுக்கமான வசதிகள் இல்லாத காலத்திலும் கூட நோய்களைக் கண்டறிந்து, வந்த நோய்களைப் போக்குவதில் பல்வேறு வேதியியலின் பண்புகள் கொண்ட மருந்துக்களைக் கொடுத்து மக்களுடைய பிணிகளைப் போக்கினார்கள்.

இப்பெரும் சிறப்பு பெற்ற சித்தர்களுக்கு மக்கள் கோயில்களை அமைத்து வணங்கி வந்தார்கள். மேலும், எங்கெல்லாம் கோயில்களை அமைத்தார்களோ அங்கெல்லாம் அவர்களுடைய திருஉருவங்களை ஏற்படுத்தி வணங்கி வந்தார்கள். இச் சித்தர்களின் கோயில்கள் பெரியார் மாவட்டத்தில் பொன்ஊதியூரிலும், சென்னிமலையிலும் உள்ளன. இவைகளைப் பற்றியும், வெள்ளக்கோவிலில் உள்ள பதினெண் சித்தர்கள் கோயில் பற்றியும் இக்கட்டுரையில் எடுத்துக் கூற விழைகின்றேன்.

---

# விசயமங்கலம் திருக்கோயில்கள்

க. இலக்குமிநாராயணன்,

அரசு அருங்காட்சியகம், சேலம்.

- - -

விசயமங்கலம், ஈரோடு - கோவை நெடுஞ்சாலையை ஒட்டி, பெருந்துறைக்கும் அவிநாசிக்கும் இடையே இருக்கும் ஒரு சிற்றூராக இன்று விளங்குகிறது. பெரியார் மாவட்டம், ஈரோடு வட்டத்தின் ஒரு சிற்றூராக தற்போது விளங்கும் விசயமங்கலம் மாவட்டத்தின் பழமைமிக்க பதிகளில் ஒன்றாகும். கொங்கு நாட்டின் 72 சமணத் திருபதிகளில் மிகச் சிறந்தப் பதியைக் கொண்டது என்ற சிறப்பை உடையது. இச்சிறப்பு எல்லோராலும் போற்றப்பட்ட சந்தடியில் இங்கே கிடைக்கும் மற்ற வரலாற்றுச் செய்திகள் மறக்கப்பட்டன.

அறிஞர் உலகம் நன்கு அறிந்துள்ள எட்டாம் சமணத் தீர்த்தங்கச் சந்திரநாதரின் சமணக் கோயிலுடன், சைவ வைணவக் கோயில்களும் இவ்வூரின் மறுபகுதியில் செழித்திருந்தன. சோமேசுவரர், நாகேசுவரசுவாமி ஆகிய சைவக் கோயில்களும் கரியமாணிக்க ஆழ்வார் திருமால் கோயிலும் கி.பி.13ஆம் நூற்றாண்டில் இங்கே மிகச் சிறப்புடன் விளங்கின.

நாகேசுவர சுவாமி மாணிக்க ஆழ்வார் ஆகிய இரு கோயில்களிலிருந்தும் ஏறத்தாழ ஐம்பது கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன. அனைத்தும் கி.பி. 12, 13, 14 நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை. இவைகளில் கூறப்பட்டுள்ள செய்திகளின் அடிப்படையில் இக்கோயில்களின் நடைமுறை மரபுகள் பற்றி இக் கட்டுரையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.